புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# எட்டுத்தொகையில் அஃறிணைஉயிர்கள் –உளவியல்நோக்கு

ரா.வனிதா
ஆய்வாளர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அரசுக்கல்லூரி,
மூணாறு, கோவை.

முனைவர். த.விஸ்வநாதன்
நெறியாளர்
இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறைத்தலைவர்,
இராமகிருஷ்ணா கலை மற்றும் அறிவியல்
கல்லூரி, கோவை.

ஆய்வுச்சுருக்கம்

சங்கச்சான்றோர்கள் அக்காலத்தே வாழ்ந்த மிகப்பெரிய உளவியலாளர்கள் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், சங்க இலக்கியங்கள் மனித உளவியலை மட்டுமல்ல அஃறிணை உளவியலையும் எடுத்துரைக்கும் தன்மையால் சங்கஇலக்கியங்களை உளவியல் இலக்கியங்கள் என்று சொல்வது பொருத்தமுடையதாக இருக்கும். உளவியல் நூலைப் படிக்காமலேயே அக்காலப் புலவர்கள், மனித மனநிலைகளைப் போலவே மிகச்சிறப்பாக அஃறிணை உயிர்களின் நடத்தைகளையும் ஆராய்ந்திருப்பது பெரிதும் வியப்பிற்குரியதாகவே அமைந்திருக்கிறது. எனவேதான், சங்கப்புலவர்களை ‘‘உயிரின அறிதிறன் மேதாவிகள்‘‘ என்று அழைப்பது சாலச்சிறந்ததாகும். உயிரினங்கள் என்னும் பார்வையை அவர்கள் விசாலமாக்கி ஒன்றுக்கொன்று தொடர்புடைய குறிப்பிட்ட உயிரினக்குழுவை மட்டும் கவனத்தில் கொள்ளாமல் ஒன்றுக்கொன்று தொடர்பற்ற பல அஃறிணை உயிரினங்களின் நடத்தைகளையும் தனித்தனியாகப் பாடியுள்ளனர். ஆகவேதான், அகநிலை செயல்பாடுகள் சார்ந்தும், புறநிலை செயல்பாடுகள் சாரந்தும் பாடப்பட்ட உயிரினங்களின் நடத்தையியல் சார்ந்த சங்கப்பாடல்களின் சொல்லாடல்கள் இவ்வாய்விற்குத் தகுதிப்பாடுடையனவாக அமையும் என்னும் நோக்கில் இவ்வாய்வு அமைக்கப்பட்டுள்ளது.

## முன்னுரை

உலகஇலக்கியச் சிந்தனைமரபில், தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்களுக்கென தனிச்சிறப்பு உண்டு. சங்கஇலக்கியத்தில் காணப்படும் திணைக்கோட்பாடுகள், முதல்,கரு,உரிப்பொருள்கள், அவற்றின் பாகுபாடுகள், வரையறைகள் ஆகியன பற்றிய குறிப்புகளும் செய்யுளின் அமைவுகளும் அச்சிறப்பிற்கு அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மேலும், அதனுள் பொதிந்துள்ள வாழ்வியல் நுட்பங்களும், இயற்கை அறிவுச்செய்திகளும் அவ்விலக்கியங்களை ஆழ்ந்துகற்போரை வியப்பிற்குள்ளாக்குவனவாக அமைந்துள்ளன.

இலக்கியத்தின் நோக்கம் மனிதவாழ்வியலைப் பாடுதல் என்றாலும், சங்க இலக்கியம் உலக அரங்கில் கொண்டாடப்படுவதற்கு அதிலுள்ள நுட்பமான இயற்கைப்பதிவுகளே மிகமுக்கியக்காரணமாகும். சங்கஇலக்கியத்தில் மனிதவாழ்வியல் பின்னணியில் அல்லது இயைபுத்தன்மையோடு இயற்கை பாடப்பட்டுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் முதல், கரு ஆகிய இலக்கியக்கூறுகளுள் அமைந்த இயற்கைதன்மைகளோடு புனையப்பட்ட சங்கஇலக்கியத்தில் இடம்பெறும் அகப்பாடல்களில் நாடகப்பாங்கு அமையப்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது. ‘‘இயற்கையானது சோகக்காட்சிக்கும், நகைச்சுவைக் காட்சிக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் ஒருநாடகப்பின்புலம்’’ என்றும் ‘‘அவ்வியற்கைக் காட்சியே பாடலின்

நாடகப்பண்பினுக்கு உரியஅரங்காகஅமைகிறது.'' என்றும் மு.வரதாராசனார் கூறுவது இங்கு நோக்கத்தக்கதாகும். (சங்கஇலக்கியத்தில்இயற்கை, மு.வரதராசன், பக்கம். 14

சங்கஇலக்கியம் என்பது தலைவன், தலைவி, பாங்கன், பாங்கி உள்ளிட்ட மாந்தர்களின் வாழ்வியல் இயற்கைப்பின்னணியோடு புனையப்பட்டது. அதில் மாந்தர் உணர்வுகள் என்பவை முதல் நிலைப்பாடு பொருள் என்றாலும் பின்னணியாக இடம் பெற்றுள்ள இயற்கைப்புனைவில் நிலம் சார்ந்த பலஉயிரினங்கள் பற்றிய பதிவுகளும், அவற்றின் வாழ்வியல் உணர்வுநிலைகள் பற்றிய பதிவுகளும் நுட்பமாக இடம் பெற்றிருப்பது கவனிக்கத்தக்க சிறப்பம்சமாகும்.

உளவியல் விளக்கங்கள் - கிழக்கும்மேற்கும்

மனிதஉடலில் கண்ணிற்குப் புலப்படமால் மனிதனை இயக்குகின்ற மிகமுக்கியகாரணியாக உள்ளம் என்பது இருக்கின்றது. உள்ளம் பற்றிய பலஆழமான கருத்துக்கள் தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டிருந்தாலும், உளவியல் என்ற தனித்ததுறை தற்காலத்திலேயே ஏற்பட்டது. குறிப்பாக மேற்கத்திய சிந்தனைகளின் வழியே இதுமுறைப்படுத்தப்பட்ட துறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. கண்ணிற்குப் புலப்படாததெனினும்

“ஆராய்ச்சியின் பொருட்டு மனம் நனவுமனம், நனவடிமனம், நனவிலிமனம் என்று மூன்றுபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.”

என்கிறார் பெ.தூரன். (மனமும்அதன்விளக்கமும்(உளவியல்நுல்),பெ.தூரன் பக்கம்.29) இவை போன்ற பகுப்புக்கள் தற்போது எழுந்தவை எனினும், தமிழர்சிந்தனையில் பல்லாயிரம் ஆண்கட்கு முன்பே தொல்காப்பியத்தில் உயிர்பகுப்பிற்கு இலக்கணம் வகுக்கப்பட்டுள்ளது. ஓரறிவு முதல் ஆறறிவு வரை வரையறுக்கும் தொல்காப்பியம்,

“ஆறுஅறிவதுவேஅவற்றோடுமனமே…”(தொல். பொருள்-27)

என்று மனம் என்பதை ஆறாவது அறிவெனவும், அது மானிடற்குரியது எனவும் கூறுகின்றது. ஆயினும் மனம் என்பதும் உள்ளம் என்பதும் நுட்பமான சில வேறுபாடுகளைக் கொண்டிருக்கின்றது. பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெற்ற எல்லா இயக்கங்களும் வித்துத்தொடராக இருப்பதே ‘ஆன்மா’அல்லது‘உள்ளம்’ என்கிறது தத்துவவிளக்கம்.

அஃறிணை உயிர்களின் நடத்தை

மனம் என்பது மனிதர்க்கு உரித்தானதென கூறியதனால், அஃறிணை உயிர்களுக்கு அது முழுமையாகப் பொருந்தாதென்று கூறமுடியாது. காரணம், தொல்காப்பியத்தின் அடிப்படையில் உயிர்ப்பகுப்பில் வாய்> மூக்கு, கண், செவி, மெய் என்ற பரிணாம வளர்ச்சியின் முதிர்ச்சியே மனம் என்பதாகும். ஆகவே> மனிதன் ஆறறறிவு எனும் போதே அவனுள் ஐந்தறிவும் அடக்கம். ஆகையால் உளவியலில், அஃறிணை உயிர்களையும் ஆய்ந்துநோக்கலாம் என்று முடிவுபெறலாம்.

“மனித இனத்தில் காணப்படும் ஒருசிலசெயல்பாடுகள், சமூக அமைப்புகளின் ஒருசிலபண்புக்கூறுகள் அக்குழுவின் வெளிக் குழுச்செயல்கள், தலைமைத் தன்மை, காதலிக்கும்முறைகள், இன்னும் புணர்ச்சி செய்யும்போது நடந்துகொள்ளும் போக்குகள், கூடிவாழும் முறைகள் போன்றவை விலங்குகளுக்கும், மனிதர்களுக்கும் ஒரேதன்மையாகவே காணப்படுகின்றன'' என்கிறது சமூகஉளவியல். குறிப்பாக>

“…டின்க்லேபக் என்பார் விலங்குகளின் சமூகநடத்தைகளைத் தீர்மானிப்பதில் நான்குகாரணிகள் முக்கியமானவைகளாக இருப்பதாக குறிப்பிடுகிறார். அவை (1)பௌதீகச் சூழ்நிலை (2)உடலியல் அமைப்பு
(3)உடலியர் காரணிகள் (4)உளவியற் காரணிகள் என்பனவாம்.” (சமூகஉளவியல், டாக்டர்.செ.ரா.பரமேஷ். பக்கம். 63-64) எனவே உளவியல்நோக்கு என்பது அஃறிணை உயிர்களுக்கும் பொருந்தும். இதுகாறும் சொன்ன கருத்துக்களுக்கு சங்க இலக்கியப்பாடல்களே சாலப்பொருந்தும் சான்றுகளாக அமைந்துள்ளன.

சங்கஇலக்கியங்களில் அஃறிணைஉயிர்களின் உளவியல்

மனிதஇனத்திற்கு மட்டுமே உளவியல் பொருந்தும் என்றகருத்தை விலக்கி அஃறிணை உயிர்களுக்கும் இந்த உளவியல்அடிப்படை பொருந்தும் என்பதனைச் சங்கப்பாடல்களை ஆராயுமிடத்து காணமுடிகிறது. உயிரோட்டமுடையதாக விளங்கும் சங்க இலக்கிங்களில்,

*உயிராக இருப்பது உணர்வாகும். அவ்வுணர்வு உயர்திணைக்கு மட்டுமல்ல அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாக அமைந்திருக்கின்றது என்பதை எடுத்துரைக்கின்றது. அதனை,*

*“ஒருசார்விலங்கும்உளவெனமொழிப” (தொல். மரபியல். 578)*

*என்னும் தொல்காப்பியரின் நூற்பாவால், உடம்பினாலும், வாயினாலும், மூக்கினாலும், கண்ணினாலும்> செவியினாலும் சேர்ந்து மனத்தினாலும் அறியும் ஆறறிவுயிராக விளங்கும் மனிதனுக்கு உண்டாகும் உணர்தல்நிலை மற்ற அஃறிணைஉயிர்களுக்கும் இருக்கிறது என்று சுட்டுவதனால் அறியமுடிகிறது. அதுமட்டுமல்லாது,*

*“எல்லாஉயிர்க்கும்இன்பம்என்பது*
*தான்அமர்ந்துவரூஉம்மேவற்றாகும்” (தொல். பொருளியல். 1168)*

*என்று நூற்பாவால் உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்க்கும் இன்பவுணர்வு உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆகவே அஃறிணைக்கும் உயர்திணைகளைப் போலவே இன்பவுணர்வு மட்டுமல்ல அனைத்துவிதமான உளவியல் நடத்தைகளும் பொருந்தியிருப்பதால், அஃறிணை உயிர்களின் உளவியல் நடத்தைகளை சங்கஇலக்கியங்கள் பதிவுசெய்துள்ள பாங்கு சிறப்பிற்குரியதாகும்.*

*களிறுள் முழங்கும் காதல்*

*உயர்திணையில் காணப்படுவது போல அஃறிணைக்கும் சிலசெயல்பாடுகளைக் காணமுடியும். அச்செயல்பாடுகள் அஃறிணையின் சுற்றுச்சூழலுக்கும் அவைசார்ந்த செயல்கள் மற்றும் பழக்கவழக்கங்களின் தன்மைக்கேற்ப அமைந்திருக்கும். மேலும், சூழலில் இருந்துகிடைக்கும் தூண்டல்களின் தன்மைக்கேற்ப ஆழ்மனப்பதிவுகளும், உணர்வுப்பூர்வமான பதிவுகளும் மறைமுகமாகவோ அல்லது வெளிப்படையாகவோ புலப்படுவதை உணர்த்துவதாக நடத்தை உளவியல் காட்டப்படுகிறது. மாந்தர் தன் உளச்சோகத்தை வெளிக்காட்ட பல்வேறு நடத்தைகளைக் கையாள்வதுண்டு. ஆயினும், அஃறிணைகளும் மாந்தர் நடத்தைக்கு ஈடாகத் தன்நடத்தையினைக் காட்டும் சங்கப்பாடலொன்று உண்டு.*

*“....... களிறு*
*உயங்குநடைமடப்பிடிவருத்தநோனாது*
*நிலையுர்யாஅந்தொலையக்குத்தி*
*வெண்ணார்கொண்டுகைசுவைத்தண்ணாந்*
*தழுங்கனெஞ்சமொடுமுழங்கும்” (குறுந்தொகை. 307)*

*இப்பாடலில், பெண்யானை ஒன்று பருகநீரின்றித் தவித்து தளர்நடையிடுகிறது. அதன் நீர்வேட்கைத் துயரத்தைத்தாங்க இயலாத ஆண்யானை, யாமரத்தை அதன் நிலைத்தன்மை கெடும்படியாகத் தன் தந்தங்களால் குத்துகின்றது. மேலும், பிடியானது நீரற்ற அதன் வெள்ளியநாரினைக் கொள்ளுதலால்வருந்தி, அதன் வற்றிய கையைச் சுவைக்கின்றது. இவையனைத்தையும் கண்ட ஆண்யானை இதற்கெல்லாம் காரணமாம் வானம், மழை பெய்யாததுதான் என்று வானத்தை அண்ணாந்து நோக்கி, வருத்தமான மனத்துடன் கதறுகின்றுதாகக் கூறப்படுகின்றது. இப்பாடலில் யானை என்ற அஃறிணை உயிரின் நடத்தையில் ஆழமான உணர்வு வெளிப்பாடுகள் மிகத்துள்ளியமாகப் பதிவு செய்யப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது.*

*குரல் வழி உளம் காட்டும் பறவை*

*களவொழுக்கத்தினைக் கடந்து கற்பொழுக்கத்தில் இல்லறம் பேணும் தலைவன் தலைவியரிடையே காணும் உணர்வு வெளிப்பாடுகளைச் சங்கப்பாடல்கள் பல சுவைபடச் சொல்லியிருக்கின்றன. அத்தகைய கற்பொழுக்கத்தில் தலைவன் தலைவியினை எவ்வாறு தன்அரவணைப்பில் பாதுகாப்பாக வாழவைக்கிறான் என்பது முக்கியமானநிகழ்வு. இதுபோன்றதொரு நிகழ்வினையொட்டிய உயர்திணைப் பண்புக்குரிய நிகழ்வினை சங்கப்பாடலொன்று பதிவுசெய்கின்றது.*

*“வங்காகடந்தசெங்காற்பேடை*
*எழாஅலுறவீழ்ந்தெனக்கணவற்காணாது*
*குழலிசைக்குரல்குறும்பலஅகவும்” (குறுந்தொகை. 151.1-3)*

மேற்கண்ட பாடலில், கூட்டில் தனித்திருக்கும் பெட்டைப் பறவையானது தன்பேடை இல்லாமை குறித்துக் கவலையோடிருக்கிறது. அந்நேரத்தில் புல்லூறானது அப்பெட்டையை இரையாகக் கொள்ளுதல் பொருட்டு அதனை நெருங்கி அதன் மேல்விழுந்தது. அச்சமயம் தனக்குப் பாதுகாப்பாக இருந்த தன் கணவனாகிய பேடையை, குழலிசை குரலால் அழைக்கும் என்ற நிகழ்வு பதிவாகியுள்ளது. மாந்தர் வாழ்வில் போற்றப்படும் கற்பொழுக்கத்தின் ஒருபகுதியினைப் பறவைகளின் வாழ்விலும் நிகழ்ந்திருப்பதை இங்குக் கண்ணுற முடிகின்றது. மேலும், பேடை இன்மையால் பாதுகாப்பின்மையினை உணரும் பறவையின் வருத்தமும், காப்பதன் பொருட்டு விடுக்கும் குரலின் ஒலியும் பதிவுசெய்திருப்பது, சங்கப்புலவர்களின் நுண்உளவியல் பார்வையினைப் புலப்படுத்துவதாக உள்ளது.

*ஊடலும் ஊடல் நிமித்தமும்*

மருதநிலத்தலைவன் பரத்தையோடு கூடிப்பின்தன் இல்லம் நோக்கிவருவானேயானால்> அவனிடம் உண்டாகும் மாறுபாட்டைத் தலைவி உணர்ந்து அவனோடு ஊடல்கொள்கிறாள். மேலும் அவனை இல்லத்தில் வர அனுமதிமறுக்கிறாள். இறுதியில் தலைவன் தான் தவறு செய்யமாட்டேன் என உறுதிகூற அவன்மீது இரக்கம் கொண்டு தலைவியானவள் அனுமதிக்கிறாள் என்பது மருதத்திணையில் இடம்பெறும் பொதுவான செய்தியாகும். இந்நிகழ்வு உயர்திணையில் மட்டுமல்ல அஃறிணையிலும் இடம்பெற்றிருக்கிறது. அதனை,

"உள்இறைக்குரீஇக்கார்அணற்சேவல்
........................................................
ஈரநெஞ்சின்தன்வயின்விளிப்ப" (நற்றிணை. 181. 1-7)

இவ்வரிகள் உணர்த்துகின்றன. இப்பாடலில், ஆண்சிட்டு ஒன்று, கூரை வீட்டுக்குள்ளே கூடுகட்டிவாழும் சிட்டுக்குருவி ஒன்றோடு சேர்ந்திருந்து விட்டு, தன்துணையான பெண்குருவியிடம் திரும்பிவருகிறது. ஆண்சிட்டின் இவ்வொழுக்கத்தினை வெறுத்த பெண்சிட்டு ,தன் சிறகுகளை ஈங்கைமலர் பூத்துக்கிடப்பது போலச் சிலிர்த்துக் கொண்டு தன்கூட்டிலிருந்த குஞ்சுகளுடன் சேரவிடாமல் துரத்தியது. பின்பு, ஆண்சிட்டு வெளியே தூரலில் நனைந்து கொண்டுநிற்க, பெண்சிட்டு நெஞ்சில் கவலை கொண்டு ஆண்சிட்டை உள்ளே வந்துவிடும்படி அழைத்தது என்னும் செய்தி இடம்பெறுகிறது. பரத்தையர்ஒழுக்கமும், ஆணைப் பணிந்து ஏற்பதும் சங்கப்பாடலில் காணும் உயர்திணைக்குரிய உளவியற்பண்புகள் ஆகும். ஆயினும், புள்ளினங்களின் வாழ்விலும் அவை பொருந்தியிருக்கும் உளவியல் பார்வையினையும்> பறவைகளின் உடல்மொழியின் பதிவுகளையும் கற்போரை களிப்புறச்செய்கின்றது.

*மந்தியின் கைம்மை நோன்பு*

இயற்கையில் உள்ள உயிர்களில் இருபாலினித்திடையே ஈர்ப்பு இருப்பதும், அதனை காதல் என்று மாந்தர் உரைப்பதும் இயல்பு. உலக உயிர்களின் காதலில் மாந்தர் கொள்ளும் காதல் அஃறிணை உயிர்களிடத்து உயர்ந்ததாகவே எண்ணலாம். மனித பண்புகளாகக் கருதப்படும் அன்பு, கருணை, தியாகம் உள்ளிட்ட பண்புநலன்கள் மாந்தரின் காதலைக் காவியமாகவும் மாற்றிவிடுகின்றன. ஒருவருக்காக ஒருவர் வாழுதல், ஒருவருக்காக ஒருவர் உயிர்நீத்தல், ஒருவர் இல்லையெனில் ஒருவர் இறத்தல், காதலின் பெயரில் இருவருமே உயிர்நீத்தல் போன்ற நிகழ்வுகள் மாந்தரின்; காதலை உயர்த்திக்காட்டுகிறது. உளவியல் பார்வையில் இத்தகைய உயர்நடத்தைகள் அஃறிணை உயிர்களிடத்து காண்பதரிது. அத்தகையதோர் அரிதான செய்தியடங்கிய பாடல் குறுந்தொகையில் காணப்படுகிறது.

"கருங்கண்தாக்கலைபெரும்பிறிதுற்றெனக்
கைம்மைஉய்யாக்காமர்மந்தி
கல்லாவன்பறழ்கிளைமுதற்சேர்த்தி
ஓங்குவரைஅடுக்கத்துப்பாய்ந்துயிரசெகுக்கும்" (குறுந்தொகை 64. 1-4)

மேற்கண்ட பாடலில் மந்தியொன்று, தன்துணையான கடுவன்குரங்கு இறந்தபிறகு> விதவை வாழ்வினை ஏற்று> தன்குட்டியைச் சுற்றத்தாரான குரங்குகளிடம் அடைக்கலப்படுத்தி, உயர்ந்தமலை உச்சியினின்று வீழ்ந்து உயிர்விடுவதாக செய்தி இடம்பெற்றுள்ளது வியப்புக்குள்ளாக்கும் உளவியலாகும். இது, அஃறிணை நடத்தையாகவே எண்ணமுடிகின்றது.

அக்காலத்தில் கணவனை இழந்த பெண்கள் கைம்மைநோன்பு ஏற்பதும், தானும் உயிர்துரப்பதும் வழக்கமாகவும் ஒழுக்கமாகவும் இருந்து வந்துள்ளது. கணவன் இழப்பைத் தாங்காத நிலையில் பெண்மேற்கொள்ளும் இவ்விரண்டு செயல்களும் அக்காலச்சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவந்தது. பின்பு உடன்கட்டை ஏறுதல் என்ற சமூகப்பழக்கமும் இதன்தொடர்ச்சியாக இருந்து வந்துள்ளது. மாந்தரின் மனநிலையில் இது சமூகக்கட்டமைப்புக்காக பின்பற்றப்பட்ட பழக்கமாகவே கருதப்பட்டும், பண்பாட்டு ஒழுக்க நடைமுறையாகப் பின்பற்றப்பட்டும் வந்துள்ளது. இத்தகைய மாந்தர் வாழ்விற்குரிய பண்பாட்டு வெளிப்பாடுகள் அஃறிணை உயிர்களுக்குள்ளும் காணும் போது ஐந்தறிவினத்தை எண்ணிவியக்கத் தோன்றுகிறது.

துணையிழந்த மானின் துயர்

உயிர்களின் வாழவியல் அடிப்படையே உறவோடு இருத்தலேயாகும். குறிப்பாக வாழ்க்கைத்துணை என்ற உறவு தனித்துவம் மிக்கது. வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் பிரியாது வாழ்ந்து வாழ்கையினை பொருளுடையதாக்கும் உறவு அதுவே. இந்த உணர்வு அஃறிணை உயிர்களுக்கும் பொருந்துமென்றே பின்வரும்பாடல் உரைக்கின்றது.

“கணையிடக்கழிந்ததன்வீழ்துணைஉள்ளிக்
குறுநெடுகதுணையமறிபுடையாடப்
புன்கண்கொண்டதிரிமருப்பிரலை
மேய்பதம்மறுத்தசிறுமையொடுநோய்கூர்ந்து
எஃகுறுமாந்தரின்இணைந்துகண்படுக்கும்” (அகநானூறு. 371. 2-7)

வேடன் அம்புபட்டு, பெண்மான் ஒன்று இறந்தது கிடக்கிறது. இதை அறியாத மறிக்குட்டிகள் பெண்மானருகே விளையாடச் செல்கின்றன. ஆண்மான் தன்துணையினை நினைத்து உணவை வெறுத்து நீரையும் பருகாது, அம்பு தன்மேல் தைக்கப்பட்டது போல பெரும் துயருருகிறது என்றுள்ள சங்கப்பாடலின்; பதிவு முற்சொன்ன கருத்தை நிரூபனம் செய்வதாக உள்ளன.

உறவின் மேன்மை உணர்த்தும் உயிர்கள்

தனிமனிதன், குடும்பம், சமூகம் என்றே மனிதகுலத்தின் படிநிலைவளர்ச்சி உருப்பெற்றது. ஐந்தறிவு நிலையிலிருந்தே பின்பு உயர்வு பெற்றது மனிதஇனம். முற்சொன்ன குடும்பம் என்ற அமைப்பே சமூகக்கட்டமைப்பிற்கு அடித்தளமானது. இக்குடும்பஅமைப்பும் அதற்குரிய நடத்தைகளும் உயர்திணைக்கு மட்டும் உரியதன்று, அஃறிணைக்கும் உரியதே என்பதை பல சங்கப்பாடல்கள் நிறுவுகின்றன.

“நசைநன்குடையர்தோழிஞெரேரெனக்
கவைத்தலைமுதுகலைகாலினொற்றிப்
பசிப்பிணிக்கிறைஞ்சியபரூஉப்பெருந்ததரல்
ஒழியினுண்டுவழுவினெஞசிற்
றெறித்துநடைமரபிற்றன்மறிக்குநிழலாகி
நின்றுவெயில்கழிக்குமென்ப” (குறுந்தொகை. 213. 1-6)

மேற்கண்ட பாடலில் ஒருஆண்மான் தன் கொம்பினால், மரம் ஒன்றின் பருத்த பெரியபட்டைகளை உரித்து வளைத்து அடிப்பகுதியைக் குத்தியெடுத்துத் தன்னுடைய கன்றின் பசியைப் போக்கிய பின்பு எஞ்சியதைத் தானும் உண்டது என்கிறது. அடுத்து> குட்டிகளுக்கு நிழலாக நின்று வெயில் நீக்குகிறது என்ற குறிப்பு இடம்பெறுகிறது. மேலும்,

“வயநாய்எறிந்துவன்பறழ்தழீஇ.......
அருவழிவிலக்கும்எம்பெருவிறல்போலும்” (அகநானூறு. 248. 2-9)

இப்பாடலில், ஆண்பன்றியொன்று, வேட்டை நாயிடமிருந்து தன் குட்டிகளையும், பெண்பன்றியினையும் முதலில் பாதுகாத்து வைத்துப்பின்பு, காட்டின் நுழைவாயில் நின்று தங்களுக்குத் தீங்கு விளைவிக்கும் வேடர்களையும் எதிர்த்து நிற்கிற செய்தி இடம்பெறுகிறது. குடும்பஉறவுகள் என்பது அனைத்து உயிர்களுக்கும் பொதுவானதாகும். சான்றாகத்தாய்மை உணர்வு, தற்காப்புஉணர்வு போன்றனவற்றை இதில் பொதுவாகப் பொருத்திக் காணமுடியும். ஆயினும்> மாந்தரினம் தடம் பிறழும் குடும்பஉறவுகளுக்கான கடமைகளில், அஃறிணைஉயிர்களின் உறுதிப்பாடு உளவியல்நோக்கில் உயர்ந்துநிற்கிறது.

உளவியல் நோக்கில் உணர்வது...

உளவியல் என்பது தற்காலத்தில் தனித்து ஏற்பட்டதுறையெனினும், உளவியற்சிந்தனைகளும், சிந்தனை வெளிப்பாடுகளும் மானுடத்திற்குப் புதிதன்று. நடத்தையின் உற்றுநோக்கல், பொருத்திப்பார்த்தல், வகைப்படுத்தல் ஆகிய அடிப்படைச் சிந்தனையில் மானுடம் உளம் பற்றிய அறிவினைப் பெற்றுவந்துள்ளது.

கண்ணிற்புலனாகாத உள்ளம், மனம், ஆன்மா போன்றன பற்றிய அறிவார்ந்த சிந்தனைகள் உலகம் முழுக்கவே தொன்றுதொட்டுப் பேசப்பட்டுவந்துள்ளன. அவற்றுள் தமிழர் சிந்தனைமரபு உளவியற்சிந்தனைகளில் முற்பட்டது என்பதற்குச் சான்று பகர்வன பழந்தமிழ்ச் சங்கஇலக்கியங்களாகும்.

சங்கஇலக்கியங்கள் பல சிறப்புகளைத் தன்னகத்தே பெற்றிருந்தாலும், அதனுள் அமையப்பெற்ற நுட்பான உளவியற்குறிப்புகள் உலகத்தார் கண்டு வியக்கத்தக்கனவாகும். உயர்திணை மாந்தரின் அகவாழ்வினை உளவியற்பாங்கோடு பதிவுசெய்துள்ளது சங்கஇலக்கியம். குறிப்பாக, மாந்தரின் அகவாழ்விற்கு அரங்காய் நின்ற இயற்கைப்பொருள்களுள் அடங்கும் அஃறிணை உயிர்களின் உளவியற்பதிவுகளும் சங்கஇலக்கியத்தில் எண்ணிலடங்காமால் உள்ளன.

தலைவன் தலைவி உள்ளிட்ட மாந்தர் வாழ்வியலைப் பாடுவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட சங்சஇலக்கியத்தில், உள்ளுறை, இரைச்சி, உவமை உள்ளிட்ட துணைமைப்பொருளாய் அஃறிணை உயிர்கள் பாடப்பட்டிருக்கின்றன. ஆயினும், அவ்வுயிர்கள் பற்றி இடம்பெற்றிருக்கும் நுட்பமான உளவியல் சார்பதிவுகள் தமிழர் இயற்கையறிவின் மேன்மைக்குச் சான்றாக அமைந்துள்ளன.

குறிப்பாக> எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் அஃறிணைஉயிர்களின் உளவியல்சார்பதிவுகள் அனைத்தும் ஆதித்தமிழரின் வரலாற்றை, நவீன சூழலியல் மற்றும் மனிதநேயப்பார்வையோடும் அணுகுவதற்குவழிசெய்கின்றன.

முடிவுரை

சங்க இலக்கியங்கள் பாடிய நம் சங்கப்புலவர்கள், இயற்கையோடு இயைந்த வாழ்வினர் என்பதால் தம்மைச் சுற்றியுள்ள உயிரிகளை மிகக் கூர்மையாக உற்றுநோக்கி அவற்றின் வாழ்வியல் செயற்பாட்டைத் துல்லியமாக ஆராய்ந்து மனித உளவியல் செயற்பாட்டைப் போல அஃறிணை உளவியலும் அமைந்திருக்கிறது என எடுத்துக்காட்டிய பான்மை வியந்துபோற்றுதற்குரியதாகும்.

துணைநூற்பட்டியல்


1. சங்கஇலக்கியத்தில்இயற்கை, மு.வரதராசன், பாரிநிலையம், சென்னை, 1964.
2. மனமும்அதன்விளக்கமும்(உளவியல்நுல்),பெ.தூரன்,பாரிநிலையம்,சென்னை>1968
3. சமூகஉளவியல்,டாக்டர்.செ.ரா.பரமேஷ்,தமிழ்நாடுபாடநூல்நிறுவனம், 2008.
4. தொல்காப்பியம்,இளம்பூரணர்,திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை. 1972.
5. அகநானூறு, வேங்கடசாமிநாட்டார்ந.மு., திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை. 1965.
6. நற்றிணை>சோமசுந்தரனார்,பொ.வே., திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை. 1955.
7. குறுந்தொகை,சோமசுந்தரனார்.பொ.வே.திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிடெட், சென்னை. 1958.


********* ********* ********** ********* ********* ********** ********** **********